# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY



குரல்: 20 யாழ்ப்பாணம் ஜூலை 1998


## யூலைப் புரட்சி

### ஆசிரியருரை:-

யூலை மாதம், புரட்சி பூத்த மாதம். 1789 யூலை 14ம் திகதி, பிரான்சியப் புரட்சி வெடித்தது. அனைத்துலகுக்கும் சகோதரத்துவம், சமத்துவம், விடுதலை என்ற நவீன மனிதனின் கனவுகளை அறைகூவிய நாள், ஆயின் அது வீண் மனித வேதனை, இரத்த வெள்ளம், கூக்குரல்களையும் கொண்டுவரும் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

இம் மனித வீழுமியங்கள் கொண்டு வரும் சமாதானமும் வரலாற்றின் அடி வானத்திற்குள் மறைவதுபோன்று தோன்றும் நிலையில் "நான் தரும் சமாதானமோ, உலகம் தரும் சமாதானம் போல் அல்ல" என்ற யேசுவின் சமாதானச் செய்தியை நினைவூட்டுகிறது. (யோவா 14:27)

நாம் நுழையவேண்டியது சலோம் (Shalom) என்ற சமாதான இராச்சியத்தினுள்; புதிய எருசலேமினுள்.

"விடுதலையை நாடுவோரே ஆண்டவரைத் தேடுவோரே, எனக்குச் செவி கொடுங்கள். நீங்கள் எந்தப் பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ, எந்தக் குழியினின்று தோண்டப்பட்டீர்களோ அதை நோக்குங்கள்." எசாயா 51:1

"உங்களுக்கு ஆறுதல் வழங்குபவர் நானேதான். மடிந்துபோகும் மனிதருக்கும், புல்லென மாயும் மானிடருக்கும் நீ அஞ்சுவது ஏன்? எசாயா 51:12

1979ம் ஆண்டு யூலையில்தான் அவசர காலச் சட்டம் தமிழ்மக்கள்மீது திணிக்கப்பட்டு, முதற் கொலைகள், விசாரணையின்றி தடுத்துவைக்கப்படுதல், சித்திரவதை அனைத்தும் ஆரம்பமாயிற்று. இன்று இருபது வருடங்களின் பின் சமாதான அழைப்பை மீண்டும் கேட்கிறோம்.

"விழித்தெழு, விழித்தெழு, ஆண்டவர் கையினின்று சினக்கிண்ணத்தைக் குடித்தவளே, மதியை மயக்கும் அக் கிண்ணத்தை அடிமண்டிவரை குடித்தவளே, எருசலேமே எழுந்து நில்."

எசாயா 51:17

"இருவகைத் தீங்குகள் உனக்கு நேரிட்டன. உனக்காகப் புலம்பியழுபவன் எவன்? வீழ்ச்சி – அழிவு, பஞ்சம் – வாள், இவை உன்னை வாட்டின; யார் உன்னைத் தேற்றுவார்?"

எசாயா 51:19

இறைவனின் வாக்குகள் காத்துக் கிடக்கின்றன. அதற்குத் தம்வாழ்வு மாற்றத்தால் செவிமடுப்போர் மிகக் குறைவு.

"தம் மக்கள் சார்பாக வழக்காடும் உன் கடவுளாகிய ஆண்டவர், உன் தலைவர் கூறுவது இதுவே: "இதோ, தள்ளாட மதிமயக்கும் கிண்ணத்தை உன் கையினின்றும் அகற்றிவிட்டேன்; என் சினக்கிண்ணத்திலிருந்து நீ இனிக் குடிக்கவே மாட்டாய்."

எசயா 51:22

"அக்கிண்ணத்தை உன்னை ஒடுக்கினோர் கையில் திணிப்பேன்; "நாங்கள் கடந்து செல்வதற்கு நீ முகங் குப்புற விழுந்து கிட" என்று அவர்கள் உன்னிடம் சொன்னார்களே! உன் முதுகை அவர்கள் தரையாகவும், கடந்து செல்வோருக்குத் தெருவாகவும் மாற்றினார்களே!

எசயா 51:23

இதற்கு வேண்டியது தேவதாயார் பத்திமா, லூர்து, மஜுகோர்ஜே, கரப்பண்டால் முதலிய காட்சித்தலங்களில் கேட்கும் செபம், தபம் என்ற இரு அம்சங்களே. செபத்தின் ஏணி செபமாலை, காலை தொட்டு மாலை வரைக்கும் நிலைத்து நிற்கும் செபநிலை, அதை ஊக்குவிக்கும் திருவிவிலிய வாசகங்கள், சங்கீதங்கள், பாடல்கள்.

தபத்தின் அறிகுறி உத்தரியம், கார்மேல் மலையின் எலியா காலந்தொட்டு காலாதி காலமாக கார்மேல் தபசிகள், தீர்க்கர்கள் அணிந்த ஆடையின் விளிம்பே உத்தரியம்.

தபமும் செபமும் அன்றாட மனமாற்றத்துக்கு வழி. அவ்வழியே சமாதானத்துக்கான வழி. அன்றாடம் மனம் மாறாவிடில் "இறை அரசு நெருங்கி விட்டதை அவ்தானிக்கமாட்டோம்." உலகம், சரீரம், பசாசு என நாம் திருமுழுக்கெடுத்தபோது தள்ளிவிடுவதாக உறுதி கூறிய மும்மலங்களும், எம்மை தம் மாயைகட்குள் அமிழ்த்திவிடும்; வாழ்வு சூனியம் ஆகிவிடும்.

எனவே சிந்திப்போம்; விரைந்து செயற்படுவோம்.

---

## காலையில் ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திரு இருதயமே! நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாக ஒப்புக் கொடுக்கும் சகல கருத்துக்களுக்காகவும், அடியேன் இன்று செய்யும் செபங்களையும் படும் துன்ப வருத்தங்களையும், கன்னி மரியாயின் மாசற்ற இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

# பிரெட்ரிக் ஓசானம்

1789 ன் பிரான்சிய அரசியற் புரட்சி அலையில், ஆயர் கிரேகோர் போன்ற சில படித்த குருக்களின் பங்களிப்பு இறைநம்பிக்கையிலிருந்தே மனித மாண்பு நிலை நிறுத்தப்படலாம், என்ற உண்மைகளை ஆணித்தரமாக மனித உரிமைகள் முன் வைத்தன. இதன் பின்னணியில் எழுந்த இரத்தவெறி, நாஸ்திகம், கடவுள் மறுப்புக் கொள்கை என்பவற்றிற்கும், பிரான்சிய புரட்சியின் இலக்குகளான சகோதரத்துவம், சமத்துவம், விடுதலை என்பவற்றுக்கும் தொடர்பு இல்லை என்று கிரேகோர் போன்றோர் இறுதி மட்டும் இடித்துரைத்தனர்.

இருந்தும் தீமையின் சக்திகள் இரத்தம் ஆறாக ஓடச்செய்தன; தலைகள் உருண்டன. இவற்றின் மத்தியில் மனித உரிமைகள் ஏழை சுறுப்பினைத்தவர் உரிமைகள் முதலியவற்றுக்காக இறுதிவரை நின்று உழைத்த சில கத்தோலிக்கரின் வாரிசாகவே பிரெட்ரிக் ஓசானத்தை நோக்க வேண்டும்.

இவர் பிரான்சிய புரட்சியின் பின் 34 ஆண்டுகள் கழித்துப் பிறந்தவர், பதினாறாவது வயதில் அரச கல்லூரியில் சிறந்த மாணவராகத் திகழ்ந்தாலும், விசுவாசத்தை வேரோடு பறிக்கும் வண்ணம் பல ஐயங்கள் அவருள் எழுந்தன. நேரிய மனமும் கூரிய அறிவும் படைத்த அவரைப் புதுப்புது வினாக்கள் ஐயங்களாக எழுந்து அலைக்கழித்தன. நல்லவேளையாக மெய்யியல் மாணவனாக இருந்ததினால் அவரது ஆசிரியரான அபேநுவாரே என்ற குரு, இவரது ஐயங்களைப் போக்கமுயன்றார், இருந்தும் பெரும் விசுவாச எதிர்சோதனை வேளைகளில் ஏசுவையேபற்றிக்கொண்டு செபத்தில் ஐயம் தெளிவுறலானார்.

பாரிஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பொழுது ஆம்பியர் என்ற அறிவியலாளரின் வீட்டில் தங்கிக் கற்றார். பாரிஸ் நகரம் உலகாயதத்தின் உறைவிடம். புத்திஜீவிகள் மத்தியில் கிறிஸ்தவத்துக்கு நிரம்ப எதிர்கள் காணப்பட்டனர். இருந்தும் இவர் பலருடன் நட்புறவுகொண்டு, அவர்கள் திருச்சபையை தாக்கியபோதெல்லாம் மறுப்புரைகள் எழுதிக் கொடுத்தார். இவரின் மறுப்புரைவாதங்களால் சமயமும் உரிமையும் ஒன்றுக்கொன்று எதிரிகள் அல்ல என்ற உணர்வு மலர்ந்தது. உலகாயத்தர்களே மறுப்புத் தெரிவித்த நிலமை மாறிக் கத்தோலிக்கர் மட்டுமே மறுப்பு விடுக்கும் நிலை வந்தது கண்டு, அன்றைய பெயர் பெற்ற பகுத்தறிவுவாதிகள், மெய்யியலாளர், பேராசிரியர்கள் வியந்தனர்.

ஓசானத்துடன் அயராது உழைத்து, ஆதாரங்களை ஆராய்ந்து மதிநுட்பத்தோடு மறுப்புரை வரையமுன் வந்த சில இளைஞர்களும் சேர்ந்து ஒரு இயக்கமாக உழைத்தனர், பிரெட்ரிக் ஓசானம் உண்மையை விளக்க அன்பு வழியை கடைப்பிடித்தார்.

மனித ஆன்மா நாடுவது மூன்று;- உண்மை, அழகு, நன்மை. இம்மூன்றும் நம் கத்தோலிக்க மறையிலே நிறை செம்மையாக உள்ளதை உலகுக்குக் காட்ட வேண்டும், என்பது அவரது கொள்கை.

1832 ல் பாரிஸ் நகரிலே காலராநோய் பரவியது. தம் விசுவாசம் பேச்சளவாகவில்லாமல் செயலளவாக மிளிர வேண்டும் என்ற நம்பிக்கையில் நோயாளரை வீடு வீடாக சென்று தரிசித்து உதவலானார். பிறமாணவரிடம் அவர் கிறீஸ்தவத்தின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்ல முனைந்தபோது. அவர்கள் அதெல்லாம் பண்டைக்காலம், இன்று கிறீஸ்தவம் மறைந்து மடிந்துவிட்டது. என எள்ளி நகையாடினார். அவர் இவ் அவமானத்தை தாழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். இதிலிருந்து பிறந்ததே வின்சென்திபவுல் சபையாகும்.

ஏழு இளைஞரும் ஒரு முதியவரும் 1833 ல் ஓர் சங்கம் அமைத்து ஏழைகளை வீடுவீடாக தேடிச்சென்று நேரில் கண்டு பேசி, ஆன்மீக துறையிலும் பொருளாதாரத் துறையிலும் இயன்ற உதவி செய்ய முற்பட்டனர்.

பிறப்பால் குஷ்யரான ஜௌவர் றோசாலி என்ற புனித வின்செண்திபோல் அன்புச்சகோதரி இவர்கள் சபைக்கு உதவ முன் வந்தார். பாரீஸ் நகரில் எந்தெந்தக் குடும்பத்திற்கு இவர்கள் உதவி தேவை என்று அவர் சுட்டிக்காட்டுவார். ஏழைகட்கு வழங்குவதற்காக பொருளுதவியும் செய்வார்.

சட்டத்துறையிலும் இலக்கியத்துறையிலும் கலாநிதிப் (டாக்டர்) (Ph. D) பட்டம் பெற்ற பிரெட்ரிக் 1839 ல் லிலான்ஸ் கல்லூரியில் வணிகச்சட்டப் பேராசியராகவும் 1844 ல் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் இலக்கிய பேராசிரியராகவும் கடமையாற்றினார்.

அவர் ஒரு கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ' மக்களிடையே பிளவு உண்டாக்கி நிற்கும் சிக்கல் இன்று அரசியல் சிக்கல் அல்ல. இது ஒரு சமுதாயச்சிக்கல், தன்னல மனப்பான்மையா, தியாக மனப்பான்மையா எதுவெல்லும் என்பதுதான் கேள்வி: சமுதாயம் என்பது வலியவர்களின் நன்மைகட்காக சுரண்டப்படும் ஒரு பெரும் சுரண்டற்களமாக இருக்கவேண்டுமா? அல்லது எல்லோருடைய நன்மைக்காகவும், சிறப்பாக எளியோரைக் காக்கும் பொருட்டு ஒவ்வொருவரும் அர்ப்பணமாகும் நிலைக்களமாக வேண்டுமா? இதுதான் முக்கியமாக நாம் தெரிந்தெடுக்கவேண்டிய விடயம்''

''பலர் அளவுக்கு மிஞ்சி பணம் படைத்திருக்கிறார்கள். இன்னும் செல்வம் சேர்க்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள். அதனால் அதிகமான மக்களுக்கு பற்றாக்குறை ஏற்படுகிறது ஒன்றுமே இல்லாத நிலைகூட பலருக்கு உண்டு. இவர்கள் இது நாள் வரை தங்களுக்கு மறுக்கப்பட்டு வந்ததை தாமே கைப்பற்றிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள் இந்த இருவகுப்பினருக்குமிடையே இன்றைக்கோ, நாளைக்கோ ஒரு போராட்டம் நடக்கவிருக்கிறது. அது பயங்கரமானதொரு போராட்டமாக இருக்கும். பணத்தின் வலிமை ஒரு புறம்; மனக்கசப்பின் வலிமை மறுபுறம்.''

''இந்த இரண்டு எதிரிகளுக்குமிடையே நாம் நம்மை ஈடுபடுத்தி உழைக்க வேண்டும். அந்த மோதலைத் தவிர்க்க முடியாவிட்டாலும், தணிக்கவாவது செய்யலாம். இது நம்மேல் சுமத்தப்பட்ட கிறிஸ்தவ கடமை, நமது இளமை, எமது நடுத்தர நிலைமை இரண்டுமே இப்பணியினை ஏற்பதற்கு எமக்கு கைகொடுக்கின்றன.''

பிரெட்ரிக் ஓசானம் 1853 ல் மரித்து இயேசு பதமடைந்தார். 1997 ல் பாப்பரசரால் ஆசாரத்துக்குரியவராக பிரகடனப்படுத்தப்பட்டார், அப்பொழுது அவர் ஆற்றிய உரை:

அன்பு செய்கிறவன் கடவுளில் நிலைத்திருக்கிறான். அதிகப்பற்றான தேவையுள்ளவர்கள் மட்டில் அன்பு காட்டியதே ஆசாரத்துக்குரிய ஓசானத்தின் வாழ்வின் மையமாக இருந்தது என, புனித வின்சன்டீபோல் சபையின் ஸ்தாபகரான பிரடிறிக் ஓசானத்தை ஆசாரத்துக்குரியவராக உயர்த்தும் திருச்சடங்கின் மறையுரையில் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் குறிப்பிட்டார். 12வது உலக இளைஞர் தினத்தில் பங்குபற்ற திருத்தந்தை பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றபோது 1997 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ம் திகதி வெள்ளிக்கிழமை பாரீசிலிலுள்ள நோற்றேடாம் பேராலயத்தில் நடை

(6ம் பக்கம் பார்க்க)

# போர் - கிறீஸ்தவ கொள்கைக்கு மாறானது

நீண்ட காலமாக ''கத்தோலிக்க தொழிலாளி'' நற்செய்தியின் உடன் கருத்துப்படி, இயேசுவைப் பசியால் வாடுபவராக, வீடற்றவராக, நோயாளியாக ஏற்றுக்கொண்டு வந்தது. இந்த வகையில் அப் பத்திரிகை சில பிரச்சனைகள், எதிர்ப்புக்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. பீற்றரினாலும் டொறத்தியினாலும் அக்காலத்தில் அடிக்கடி குறிப்பிட்ட உடல் சம்பந்தப்பட்ட அன்புச் செயல்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தமை, மக்கள் இதயங்களில் ஒருவித தீயைப் பற்றவைத்தது. சர்ச்சைக்குரியதான ஆன்மீக அன்புச்செயல்கள் பற்றியும் குறிப்பாக அதுபற்றிய அறியாமையையும் விளக்கிக் காட்ட முற்பட்டபோது புரிந்துணர்வின்மையும் எதிர்ப்பும் தோன்றியது.

இன்று கடுவட்டிமுறை என்றழைக்கப்படும் வரம்பற்ற வட்டிமுறையைத் தடைசெய்து முழுச் சமூகத்தையும் குறிப்பாக ஏழைமக்களையும் திருச்சபை பாதுகாத்து வருவதாக பீற்றர் எண்ணினார். வரலாற்றின் இடைநிலைக் காலத்திய திருச்சபையின் கருத்துப்படி கடுவட்டிமுறை ஒரு சாதாரண இலாபமாகவே இருந்தது. கடுவட்டி முறையின் மீதான தடையின் பலவீனமானது, கத்தோலிக்க சமூகத்தை, முதலாளித்துவத்தையும் இலாபநோக்கையும் எதுவித விளக்கங்களுமின்றி ஏற்க அனுமதித்திருக்கிறது. அது சமூகத்தினால் மாற்றப்படுவதற்குப் பதிலாக சமூகத்தையே மாற்றியமைத்துள்ளது

பீற்றரின் நிலை இதுவேயாகும். சட்டரீதியான வட்டிமுறையினால் சமூகத்திற்குள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தீமைகளின் பின்னணியிலேயே அவரது இருநூற்றுக்குமதிகமான கட்டுரைகள் எழுந்தன. ''பணம் வரைவிலக்கணத்தின்படி ஒரு பரிமாற்றுடகம். பணத்தைச் சம்பாதிப்பதற்குரிய ஊடகமல்ல. பரிமாற்றுடகமாக பணம் பாவிக்கப்படுகையில் அது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை நுகரப் பயன்படுகிறது. பணம் ஒரு முதலீடாகப் பயன்படுகையில் அது உற்பத்தியாக்கப்பட்டவற்றின் நுகர்வுக்குப் பயன்படவில்லை. மாறாக அது மேலும் பொருட்களை உற்பத்தியாக்கி, அதன்மூலம் மேலதிக உற்பத்தியைத் தோற்றுவித்து வேலையில்லாத் திண்டாட்டத்தையே அதிகரிக்கிறது. வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படும் அதிக பணம் வியாபாரத்தையே வியாபாரத்துக்கு வெளியே வைத்துவிடுகிறது.'' ஏழைகட்கு கொடுக்கப்படும் பணமோ சுற்றோட்டத்தில் உள்ள பணம். அதுவே தன் கடமையைச் செய்கிறது. முதலீடாகப் பாவிக்கப்படும் பணமோ தனது கடமையைச் செய்யாத தகுதியற்றதாக விற்கப்படும் பணமாகும்.

இதுவே பீற்றரின் நற்செய்திபற்றிய விளக்கமாகும். இது மிகவும் அடிப்படையான சொத்துபற்றிய கிறிஸ்தவக்கோட்பாடாக அமைந்திருந்தது. பல விசுவசிக்கும் கத்தோலிக்கரை திகைப்படையச் செய்தது.

''கத்தோலிக்க தொழிலாளியின்'' போர் பற்றிய எதிர்ப்பானது மற்றொரு சவாலாக அமைந்தது. ஸ்பெயினில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது ''கத்தோலிக்க தொழிலாளி'' அந்தப் போரில் அமைதியை ஏற்படுத்தவும் நடுநிலைமை வகிக்கவும் தொடங்கியது. அப்போரின் இரு அணியினரான பிறாங்கோ பக்கத்திலிருந்தும், லோயலிஸ்ற் பக்கத்திலிருந்தும் மக்கள் கொல்லப்படுவதை அது எதிர்த்தது. இதனால் அப்பத்திரிகை தனது ஆதரவாளர் பலரை இழக்க வேண்டியதாயிற்று.

கத்தோலிக்க தொழிலாளிக்கு ஏற்பட்ட மற்றொரு சோதனை 2ம் உலக மகாயுத்தத்தின்போது உண்டானது. இப்போரின் தொடக்கத்திலிருந்தே ''கத்தோலிக்க தொழிலாளி'' சர்வாதிகாரத்தையும் யூத இன அழிப்பு முறைகளையும் வெளிக்காட்டும் விளக்கமான கட்டுரைகளை வெளியிட்டு வந்தது. நாஜிக் கட்சியையும் யூதர் மீதான கலாபனைகளையும் எதிர்ப்பதற்காக ''கத்தோலிக்க தொழிலாளி'' குழுவினர் நியூயோர்க்கிலுள்ள ஜெர்மானிய தூதரகத்தின் முன்பாக மறியல் போராட்டம் நடத்தினர். யூத இன ஒழிப்பை எதிர்த்துப் போராடவென, கத்தோலிக்க குழுவொன்றை டொறத்தி ஒழுங்கு செய்தாள்.

1941 களில் ஐக்கிய அமெரிக்காவும் 2ம் உலகப்போரில் குதித்தது. டொறத்தியோ ''மொட்'' வீதியிலுள்ள இயேசுவின் உருமாற்ற ஆலயத்துள் சென்று ''இரக்கமுள்ள இறைவா! எம் தந்தாய் நாம் மௌனம் சாதிக்கலாமா? அல்லது பேசலாமா? நாம் பேசலாமெனில் எதைப் பேசுவது? எனச் செபித்தாள்.

''கத்தோலிக்க தொழிலாளி'' தனது 1942 ஜனவரி இதழில் கூறியதாவது:- எமது நாடு பிரகடனப்படுத்தாத யுத்தத்திலிருந்து பிரகடனப்படுத்திய ஒரு யுத்தத்திற்குள் நுழைகிறது, நாமோ நமது அறவழியை வலியுறுத்தும் நிலையிலேயே தொடர்ந்து நிற்கிறோம். நாமோ உலகம் முடியும்வரை எம்மோடிருக்கும் கிறிஸ்துவினுடைய ''உங்கள் பகைவரை அன்பு செய்யுங்கள், உங்களை வெறுப்பவர்களுக்கும் நன்மை செய்யுங்கள்'' என்ற வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுப்போம். நாம் எல்லோரும் சமாதானத்தை ஏற்படுத்துவோராய் இருக்க முயல்வோம். என்ற கருத்தைக் கொண்டுள்ள கிறிஸ்துவின் மலைப்பொழிவே எமது கொள்கையின் விளக்கமாகும்.''

''பலமாயுள்ள எம் மனச்சான்றின் எதிராளிகளோடு பேசுவதாயிருந்தால் நாம் ஆயுதம் தாங்கிய யுத்தத்தில் பங்கேற்கமாட்டோம். இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்யமாட்டோம். போர்முயற்சிகளை மேலும் வளர்க்கும் அரசாங்கத்தின் உண்டியல்களையோ, கடன்முறிகளையோ வாங்க மாட்டோம். மேற்கூறிய முயற்சிகளைச் செய்யும்படி மற்றவர்களையும் தூண்ட மாட்டோம் என டொறத்தி முழங்கினார்.

முதலாம் உலகப்போரில் அவளது நிலைப்பாடு நடைமுறைச் சாத்தியமான அறவழியைப் பெறவில்லை. அவளது புரட்சி நற்செய்தி கூறும் சாத்வீகப் புரட்சியே. நற்செய்தியின் புதிய படைப்பானது அன்பின் அறவழிப்புரட்சியூடாக கடவுளின் அரசில் ஒரு மங்கலான காட்சியையாவது காட்டுவதற்கு முயற்சித்தாள்.

நிரபராதிகளினால் ஏற்கப்படும் துன்பமே தீமையை வெல்லுவதற்கு உண்மையான வழி என்பதை நிச்சயத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ளும் சிலுவையின் ஞானமே டொறத்தியின் அறவழியாகும். நிரபராதிகளின் துன்பமே உலகத்தை மீட்கும் என்ற மறைபொருளே டொறத்தியின் ''கத்தோலிக்க தொழிலாளியின்'' கொள்கைப்பாடாகும். இரக்கம் என்பது அன்பின் குறிப்பாகப் பிறரது தேவையின் சார்பாக எழும் அன்பின் மறுபெயராகும் என கத்தோலிக்க தொழிலாளி வற்புறுத்திக்கொண்டேயிருந்தது.

மனித உரிமைகளை மீறுதல், போர், போருக்கான ஆயுதங்கள் என்பவற்றை எதிர்ப்பவர்கட்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்பதற்காக டொறத்தி தயங்கவில்லை, பெண்களுக்கான வாக்குரிமையில் பட்சபாதம் இருப்பதை நிருபித்தமைக்காகவே டொறத்தி முதன் முதல் கைது செய்யப்பட்டு சிறையிலிடப்பட்டாள். (வளரும்)

# ஏழாம் நாள் வருகையினர் கிறீஸ்தவ ஐக்கிய சந்திப்பு - சனியா? ஞாயிறுவா?

ஏழாம் நாள் வருகையினரின் சகோதரர் சிலரைச் சந்தித்தபோது, சனியா? ஞாயிறுவா? ஓய்வுநாளென குழம்பிக் கொண்டிருப்பது தெரியவந்தது.

இணைச்சட்டம் 5:12 கூறுகிறது;- ''உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்டபடி ஓய்வுநாளை புனிதமாகக் கடைப்பிடி.''

விடுதலைப் பயணம் 20;10,11 கூறுகிறது:- ''ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வுநாள் .. ஏனெனில் ஆண்டவர் ஆறுநாட்களில் விண்ணுலகையும் மண்ணுலகையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.''......

இதை பல கிறிஸ்தவ சபைகள் மாற்றி விட்டன என வாதப் பிரதிவாதங்கள் எழுகின்றன.

மோயிசனுக்கு கடவுள் அருளிய பத்துக் கட்டளைகளை மாற்ற முடியுமா?

''திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ணவேண்டாம் அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்,'' மத் 5:17

3ம் கற்பனையின் அனுஷ்டிப்பு ஆண்டவர் யேசு காலத்தில், பரிசேயரின் விளக்கம், விவரிப்பு, விகாரப்படுத்தப்பட்ட விமரிசனங்களால் சிக்கலாக்கப்பட்டு பெரும் சுமையாக மாற்றப்பட்டிருந்தது. இதனால் யேசு, மத்23:23-24ல் கூறுகிறார்:-

வெளி வேடக்கார மறைநூல் அறிஞரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! கேடு. நீங்கள் புதினா சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால் திருச்சட்டத்தின் முக்கிய போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டுவிடுகிறீர்கள் .. . குருட்டு வழிகாட்டிகளே நீங்கள் பருகும்போது கொசுவை வடிகட்டி அகற்றுகிறீர்கள். ஆனால் ஒட்டகத்தையோ விழுங்கி விடுகிறீர்கள்.''

எனவே, ஓய்வுநாளுக்கும் ஆண்டவராகிய யேசு, ஓய்வுநாளில் புதுமைகள் செய்தார், பலரைக் குணமாக்கினார். (மத் 12:1-8, 12:9-14, மாற் 3:1-6, லூக் 6;6-11.)

யேசு மேலும் கூறுகிறார்.'' ஆட்டைவிட மனிதர் எவ்வளவோ மேலானவர். ஆகவே ஓய்வுநாளில் மனிதருக்கு நன்மை செய்வதே முறை. மத் 12:12.

யேசுவின் மரணத்தை தீர்மானிப்பதற்கு இதுவும் ஒரு காரணம் ''அவன் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்காதவன்.''

எனவே தான் தொன்றுதொட்டு கிறிஸ்தவர்கள் புதிய சிருஷ்டிப்பின் முதல் நாள், யேசு உயிர்த்த நாளை ஞாயிறு தினமாக கொண்டாடி வந்தனர். இதற்கும் பழைய சிருஷ்டிப்பின் ஏழாம் நாள் ஓய்வுநாளுக்கும் வித்தியாசம் கண்டனர். சனி ஓய்வுநாளை சில யூத கிறிஸ்தவர்கள் ஞாயிறு ஆண்டவரின் நாளோடு அனுசரித்தனர். புதிய சிருஷ்டிப்பின் ஞாயிறையே பரிசுத்த நாளாகக் கடைப்பிடித்து வழிபாடு நடத்தினர்.

''ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று தூய ஆவி என்னை ஆட்கொள்ளவே எனக்குப் பின்னால் பெரும் குரல் ஒன்று எக்காளம் போல் முழங்கக் கேட்டேன்.''
திருவெளி 1;10.

இது அவர்கள் நற்கருணையைக் கொண்டாடிய நாளைக் குறிக்கும் சொற்பதமாகவும் ஏற்கப்பட்டது ஓய்வு வேலைத்தடை ஆன்மீகப்படுத்தப் பட்டது.

ஓய்வுநாள் கட்டளை வேறு, ஞாயிறு வேறு. யூதர்களிடம் இருந்து ரோமர் ஏழுநாள் பகுப்பை ஏற்றனர். ஞாயிறு அரச ஓய்வுநாள், வழிபாட்டுக்கும் வசதியாயிற்று.

''வாரத்தின் முதல்நாள் அப்பம் பிட்பதற்காக நாங்கள் கூடியிருந்தோம்.''
(திருத். 20:7)

''நீங்கள் ஒவ்வொருவரும் வாரத்தின் முதல்நாளில் அவரவர் வருவாய்க்கு ஏற்றவாறு ஒரு தொகையைச் சேர்த்து வைத்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் நான் அங்கு வந்து சேர்ந்தபின் நன்கொடை திரட்டவேண்டியிராது.''
(1 கொரி 16;2)

வழிபாடு செய்வதற்கு ஞாயிறு அதிகாலை யேசு உயிர்த்தெழுந்தது அடிப்படையாகியது. (மத் 28;1, மாற் 16:1, லூக் 24:1, யோவா 20:1)

அந்நாள் யேசுவின் இறுதியுணவை நினைவுகூரும் நாளாகவும் மாறியது.
(திருத்தூ. 20:7)

திருச்சபையின் திருஆண்டு பஞ்சாங்கம், யேசு உயிர்த்த ஞாயிறு தினத்தின் முக்கியத்துவத்தோடுதான் ஆரம்பித்தது. இந்நாளிலேயே அவர்கள் (சீடர்கள்) வாரவழிபாட்டுக்கு ஒன்றுகூடி (லூக் 24:30) அப்பம் பிட்டனர். திருமறை படித்தனர். (திருத்தூ 20:7-9) மறை உரை கேட்டனர். பிறர் நலன் கட்காக காணிக்கை சேர்த்தனர். (1 கொரி 16:2) அனைத்தும் ஞாயிறு தினத்திலேயே.

கி. பி. 4ம் நூற்றாண்டு வரை ஓய்வு நாள் பற்றிய கட்டளை கிறிஸ்தவர்களால் ஞாயிறுவுக்கு உரியதாய் கருதப்படவில்லை. தேர்த்துல்லியன் ஞாயிற்றுக் கிழமைகளில் தொழில் செய்யாமையை ஓரளவு தூண்டினார். ஆயின் ஓய்வுநாள் அனுசரிப்பை அவர் மனதில் கொண்டிருக்கவில்லை. கொன்ஸ்ரன்ரைன் மன்னனே சட்டரீதியாக ஞாயிறு தினத்தை பகிரங்க ஓய்வுநாள் ஆக்கினான். அரச அலுவல்கள் தடை செய்யப்பட்டன. ●

---

## ஒரு முக்கிய குறிப்பு:-

கத்தோலிக்கரை, சிலைவணக்ககாரர் எனச் சில கிறிஸ்தவ சபையினர் குற்றம் சுமத்தி வருகிறார்கள். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய ''சாங்கோபாங்க சுவாமிகள்'' என்ற நூலில், இச்சர்ச்சையை முன்வைத்த பிரான்சிய பதிதனுக்கு சாங்கோபாங்க சுவாமிகள் தந்த விடை விபரமாகக் கூறப்படுகிறது. மேற்படி நிகழ்வின் சுருக்கத்தை ''யாழ். திருச்சபை வரலாறு'' (பக்கங்கள் 69 முதல் 74 வரை) என்ற எமது வெளியீட்டில் காணலாம். ●

# ஸ்பானிய நாட்டு கரபண்டால் கிராமத்தில் தேவதாயின் காட்சிகள்

1960 களில் ஸ்பெயின் நாட்டின் வடமேற்கு மலைப்பகுதியில் உள்ள சான் செபஸ்ரியன் கரபண்டால் என்ற சிறிய கிராமத்தில் நடந்த தேவதாயின் காட்சிகளை எமக்கு அங்கிருந்து அறிமுகப்படுத்தியவர் பிரபல சிங்களப் பாடகரும் ஜனாதிபதி விருது பெற்றவருமான (பௌத்த சிங்களப் பின்னணியில் இருந்து கத்தோலிக்கரான) நிமால் மெண்டிஸ் ஆவார். நம் மண்ணின் இனக்கலவரங்கள் பற்றி இவர் 1986 ல் யாழ். பகுதிகட்கு வந்து தயாரித்த ஆங்கிலத்திரைப்படம் The Dawn of Terror.

1961 ஜுன் 18ம் நாள் கொன்சிற்றா (12 வயது), மரிலோலி (12 வயது,) மாரி குருஸ் (11 வயது) ஜசிந்தா (12வயது) என்ற 4 சிறுமிகள் விளையாடிக்கொண்டிருந்த சமயம் ஒரு இடிமின்னல் இரைச்சலின் பின் பிரகாசமிக்க வானதூதர் ஒருவரைக் கண்டனர். பயந்து விடு வந்து சேர்ந்தனர். மீண்டும் பன்னிரு தினங்கட்குள் எட்டுத்தடவைகள் தூதர் காட்சி தந்தார்.

யூலை முதல் தேதி மீண்டும் தோன்றிய வானதூதர், ''நாளை ஞாயிறு தினத்தில் தேவதாய் கார்மேல் மாதாவாக உங்களைச் சந்திப்பார்'' எனக் கூறினார்.

யூலை 2ம் திகதி மாலை 6 மணியளவில் இரு வானதூதர் மத்தியில் தேவதாய் தோன்றினாள். சிறுவர்களுடன் சேர்ந்து செபமாலையைச் செபித்தாள் அவர்களுடன் சம்பாஷித்தாள். அடுத்த 4 வருடங்களில் பல நூறு தடவைகள் இச் சிறுவர்கட்குக் காட்சி தந்தாள்.

அன்னையைக் கண்ட அளவற்ற மகிழ்ச்சியில் பரவச நிலையில் அச்சிறுமிகள் பின்னோக்கிச் சாய்ந்து கிடந்தாலும் அவர்களது உடைகள் நிலை குலைந்தோ அல்லது அவர்களது தோற்றம் அசிங்கமாகவோ இருக்கவில்லை. அவர்களது தோற்றத்தில் பரிசுத்தம் பரிமளித்துக் கொண்டிருந்தது.

தேவதாயின் காட்சிகளைக் காண வருவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தது. பல குருக்களும் வரத் தொடங்கினர். 1961 ஆகஸ்ட் 8ல் அருட்தந்தை லூயிஸ் மரியா அண்ட்ரு என்ற குருவும் தேவதாயை பார்க்கும் பாக்கியம் பெற்றார்.

தேவதாயின் முதற் செய்தி 1961 யூலை 4 ல் வெளியிடப்பட்டது.

''நாம் அநேக பரித்தியாகங்களைச் செய்ய வேண்டும். தபச்செயல்களில் ஈடுபடவேண்டும். அடிக்கடி நற்கருணை சந்திக்கும் பழக்கத்தை அனுசரிக்க வேண்டும். முதலில் நாமே நல்வழியில் நடக்க முயற்சிக்க வேண்டும். தீயசெயல்களால் கிண்ணம் ஏற்கனவே நிரம்பி விட்டது. எனவே மேற்கூறிய பரிகாரிப்புகள் இல்லாவிடில் எம்மேல் பெருந் தண்டனை வந்து விழும்''

முதலில் ஒரு எச்சரிக்கை கிடைக்கும் பின் ஒரு வியாழன் இரவு 8-30 மணிக்கு ஒரு பெரிய புதுமை நிகழும். ருசியா மனந்திரும்பும்.

இந்த எச்சரிக்கைகட்கும் புதுமையான அடையாளத்துக்கும் உலகு மனந்திரும்பாவிடின் பெருந்தண்டனை வந்தே தீரும்.

1965 யூன் 18 ல், அதிதூதரான புனித மிக்கேல் சம்மனசினூடாக இறுதிச் செய்தியை தேவதாய் தந்தாள். தேவதாயின் முதற் காட்சியில் அவளது இரு பக்கங்களிலும் நின்ற வானதூதர்களிலொருவர் புனித மிக்கேல் என காட்சிச் சிறுவர்கள் பின்னர் கூறினர்.

''ஒக்ரோபர் 18 ல் நான் கொடுத்த செய்தி, நிறைவேற்றப்படாது அசட்டை பண்ணப்பட்டபடியால், இவ் இறுதிச் செய்தி விடப்படுகிறது.''

''முன்பு கிண்ணம் நிறைந்தது. இப்போது நிரம்பி வழிகிறது. பல கருதினால்கள், ஆயர்கள், குருக்கள், அழிவின் பாதையில் செல்கின்றனர், தங்களுடன் பல ஆன்மாக்களையும் கொண்டு செல்கின்றனர். நற்கருணைக்கு முக்கியத்துவமளிப்பது நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது ''

''உங்கள் பிரயாசைகளால் இறைவனின் கோபத்தைத் தணிக்கவேண்டும் நேர்மையான உள்ளத்துடன் அவரின் மன்னிப்பைக் கேட்டால் அவர் கட்டாயம் மன்னிப்பார்.''

உங்கள் அன்னையாகிய நான் தூதர் புனித மிக்கேல் மூலமாக இச்செய்தியை தெரிவிக்கிறேன்.''

''உங்கள் வாழ்க்கை முறையை செவ்வனே சீர்ப்படுத்துங்கள். நான் உங்களை மிக அதிகமாக அன்பு செய்கிறேன். எனவே உங்கள் அழிவை நான் விரும்பவில்லை.''

''இதுவே இறுதி எச்சரிக்கை. நேர்மையுடன் வேண்டுதல் செய்து உங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் பரித்தியாகம் செய்வது மிக அவசியம், யேசுவின் பாடுகளைத் தியானியுங்கள்.

தேவதாய் எதிர்பார்ப்பது

1. காலையில் ஒப்புக்கொடுக்கும் செபம் செபித்தல்.
2. தவத்தின் உத்தரியத்தை அணிந்து உன்னை மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்படைத்தல்.
3. தினமும் மூன்று செபமாலைகள் ஓதித் தியானித்தல்.
4. அலகையின் கண்ணிகளிலிருந்து மீட்டெடுக்கப்பட அதிதூதர் புனித மிக்கேலின் உதவியைத் தினமும் நாடுதல்.

---

## வரலாறு கூறுகிறது

வில்லியம் மிலர், ஒரு அமெரிக்க பப்ரிஸ்த மதபோதகர் தானியேல் ஆகமம் 8;14 படித்துவிட்டு 1843 மார்ச் 21 க்கும் 1844 மார்ச் 21 க்குமிடையில் யேசுவின் 2ம் வருகை எனத் தீர்க்க தரிசனம்கூறிச் சிலரைத் தன்னுடன் இணைத்தார். 1849ம் ஆண்டு அவர் மரித்த பின், அவரின் நெருங்கிய நண்பர்களான எலன் G வைற்றும் கணவனுமே ஏழாம் நாள் வருகைச் சபையின் தீர்க்கதரிசிகள் ஆயினர் ''பெரிய தர்க்கம்'' போன்ற நூல்களே இச்சபையின் கையேடுகள்.

இச்சபை சம்பந்தமாக கவனிக்க வேண்டிய 5 அம்சங்கள் வருமாறு:-

1. இறுதிநாள் தீர்ப்பின்போது பதிவு நூல்களைத் திறந்து யேசுவில் விசுவாசியாதவர்கள் பெயர்களுக்கு நேரே மன்னிப்புப் பெறாத பாவங்கள் இருப்பின் அவர்கள் பெயர்கள் வெட்டப்படும் (நூலில் இருந்து நீக்கப்படும்.)
2. லெவித்திகர் 16 சொல்லும் பலி ஆடு போன்று சாத்தான், பாவங்கள் சுமக்கும் பொறுப்பு உண்டு. ஏனெனில் அவனே பாவத்தின் ஆரம்ப கர்த்தா.
3. இறுதி நாளில் தீயோர் அழிக்கப்படுவார். நித்திய நெருப்புக்குள் புகார்.
4. மரணத்தின் பின் இறந்தோர் உயிர்க்கும்வரை உணர்வற்ற உறக்க நிலையில் இருப்பர்.
5. ஓய்வு நாள் ஏழாம் நாள் சனி – சபத். இதைக் கடைப்பிடிப்பது இரட்சணியத்துக்கு அவசியம். இறை உறவுக்கும் இது தேவை.

20ம் நூற்றாண்டின் கலாத்தியர் இவர்களோ? (கலா 1:8)

இறுதிப் பெரும் துன்ப நாட்களில் ஞாயிறு தின அனுசரிப்பு, திருவெளிப்பாட்டு பயங்கர விலங்கின் (திருவெளி 13ம் அதி) அடையாளமாகும்.

# தேவதாயின் அற்புத வரலாறு [தொடர்ச்சி]

## திருக்குடும்பம் எகிப்து தேசத்திலிருந்து நசரேத்தூருக்கு வந்ததன் வரலாறு வருமாறு:-

திருக்குடும்பம் எகிப்து தேசத்திலே ஆறு வருடங்கள் இருந்தபிறகு நசரேத்தூருக்குத் திரும்பிப் போகும்படியாக பரமபிதாவானவர் தேவசுதனுக்கு நிரூபித்தார். ஓர் தேவதூதன் அர்ச். சூசையப்பர் பிரயாணப்படும்படியாகச் சொன்னவுடனே தேவமாதாவும் சூசையப்பரும் தங்களுக்கிருந்த சொற்ப வீட்டுச் சாமான்களை விற்று அதைப் பிச்சைக்காரருக்குத் தானம் கொடுத்துவிட்டு எலியோப் போலிஸ் என்னும் நகரத்திலிருந்து ஏழு வருடங்களுக்கு முன் தாங்கள் வந்த வனாந்தர வழியாகச் சம்மனசுக்கள் புடைசூழ பிரயாணம் செய்தார்கள். தேவமாதா ஓர் சிறிய வாகனத்தின் மீதும் அர்ச் சூசையப்பர் நடந்து கொண்டும் போனார்கள். சூசையப்பர் நடக்கும்போது அடிக்கடி செபம் செய்து கொண்டும் ஞான காரியங்களைக் குறித்து தேவமாதாவினிடத்திற் பேசிக்கொண்டும் திவ்விய குழந்தைக்கு இனிய பாடல்களைப் பாடிக்கொண்டும் அவரைப் பார்த்து அகமகிழ்ந்து கொண்டும்போவார். வழியில் போசனம் குறைவுபட்டதால் திவ்விய பாலகன் புதுமையாக அப்பங்களை அதிகப்படச் செய்து அவர்களை சாப்பிடும்படியாக சம்மனசுக்களுக்குக் கட்டளையிட்டார். பின் அவர்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள்.

இந்தப் பிரயாணத்தில் மிகவும் வருத்தமடைந்து பலஸ்தின் தேசத்திற்கு வந்தபோது கொடிய ஏரோதரசன் மரணமடைந்தானென்றும் அவன் மகன் யூதேயா தேசத்தில் அரசு செய்கிறானென்றும் கேள்விப்பட்டு மெதித்திரேனியன் சமுத்திரம் வழியாக நசரேத்தூருக்கு வந்து சேர்ந்தார்கள். தங்களுடைய சிறுவீட்டிற்கு வந்தவுடனே ஏரோதனுடைய கொடுமையினின்று மீட்டு வழியில் தங்களுக்குச் செய்த உபகாரத்திற்காக இறைவனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்தார்கள். தேவமாதா மகாவீரத்துவமான புண்ணியங்களை எல்லாம் செய்ய தெய்வ சித்தமாகையால் ஆண்டவர் அச் சிறுவீட்டிலிருந்த இருபத்து மூன்று வருட காலமாக அவளைச் சோதித்தார். அவள் வழக்கமாகக் கொண்டிருந்த தேவானந்த ஆறுதலை அவளைவிட்டு நீக்கினார். சில வேளைகளில் அவளிடத்திற் பேசாமல் வெகுநேரம் தனிமையாயுமிருப்பார். தேவமாதா பாலகனை சாப்பாட்டிற்கு அழைக்கும்போது முன்போல உடனே வராமலிருப்பார். சில சமயங்களில் அவளைப் பார்த்து ஒரு வார்த்தைகூட பேசமாட்டார். அவள் கண்ணீர் விட்டழுதுகொண்டு அந்நாளில் தான் செய்த தப்பிதங்களுக்காக இரவில் சாஷ்டாங்கமாக அவர் பாதத்தில் விழுந்து மிகுந்த தாழ்ச்சியுடன் பொறுத்தல் கேட்பாள். இவரோ எப்பேச்சும் பேசாமல் போகும்படி சொல்லுவார். திவ்விய பாலகன் பேசவும் தம்மை நோக்கிப் பார்க்கவும் முதலாய் தான் பாத்திரமுள்ளவளல்லவென்று நினைத்துக்கொண்டு ஆண்டவருடைய ஊழியத்தில் என்ன தப்பிதம் செய்தோமோவென்று கலங்கி வியாகுலத்தோடு அழுது கொண்டிருப்பாள்.

உலக இரட்சகர் தமது தாயின் வீரத்துவமான புண்ணியங்களைக் கண்டு மனதில் அகமகிழ்ந்தாலும் வெளியில் காட்டாமலிருப்பார். இப்படி முப்பது நாட்கள் சென்றபின் இவள் அவருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து நான் எதுவிஷயத்தில் தேவரீருக்குத் துன்பத்தை ஏற்படுத்துகிறேனென்று அடியாளுக்குச் சொல்ல வேண்டுமென்று தாழ்ச்சியுடனே வேண்டிக்கொண்டாள். அப்போது ஆண்டவர் திருவாய் மலர்ந்து தாயே எழுந்திரும் என்ற சத்தம் கேட்டவுடன் தேவானந்தப் பரவசம் அவளுக்குள் வந்தமையால் அவள் ஆத்துமம் சொல்ல முடியாத சந்தோஷத்தை அனுபவித்தது. ஆனால் துன்பத்திலேயே அவள் நாள் எல்லாம் விடவேணுமென்று தேவ திருவுளம் இருக்கையில் அவளுக்கு வேறு துன்பம் வந்தது. இஸ்ரவேல் சனங்கள் வருஷத்திற்கு மூன்றுதரம் ஜெருசலேமென்கிற பட்டணத்துக்குப் போய் இறைவனை வணங்கும்படியாக மோசேயின் கட்டளை ஒன்று உண்டு. அக்கட்டளை ஆண்களுக்கே உரியது, பெண்களுக்கல்ல. இது வெகு தூர பிரயாணமானாலும் தேவமாதாவும் அர்ச். சூசையப்பரும் திவ்விய குழந்தையை மாறிமாறி எடுத்துக்கொண்டு அப்பயணங்களில் வெகு வருத்தங்களை அனுபவிப்பார்கள்.

ஒருதரம் யேசுநாதர் பன்னிரண்டு வயது நடக்கிறபோது ஏழுநாள் மட்டும் கொண்டாடுகின்ற அசீம் பண்டிகைக்கு போய்த் திரும்பி நசரேத்தூருக்கு வருகையில் ஆண்டவர் இவர்களை விட்டு விலகிப்போனார். ஆண்களும் பெண்களும் தனித்தனியே கும்பலாகப் பிரயாணம் செய்வது அக்காலத்து வழக்கம். குழந்தைகள் பெண்களோடும் ஆண்களோடும் இருக்கலாம். ஒருநாள் பிரயாணம் நடந்தபின் தேவமாதாவும் சூசையப்பரும் வேறுவழியால் தங்கள் சிற்றூருக்குத் திரும்பி வரக் கூடினபோது அவரிடத்திலும் இவளிடத்திலும் திவ்விய பாலகன் இராததைக் கண்டு பேச்சற்றுத் திகைத்து அவர் காணாமற் போனது: தேவமாதா தன்னுடைய அசட்டையினாலென்றும் சூசையப்பர் தன் அசட்டையினாலென்றும் சொல்லி இருவரும் கலங்கி நின்றார்கள்.

(தொடரும்

## பிரெட்ரிக்...

(2ம் பக்க தொடர்ச்சி)

பெற்ற வைபவத்தில் அவர், இன்றைய நற்செய்தியில் என் அயலான் யார்? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு சமாரியனை முன்னுதாரணமாக யேசு தருகின்றார். அயலான் யார் என்ற வினாவுக்கு எந்த தேசிய இனத்தவன், அல்லது சமூக மத அமைப்பை சேர்ந்தவன் என்று பல கேள்விகளைக் கேட்பது தேவையற்றது - தேவையிருந்தால் உதவி செய்யப்பட வேண்டியவனே அயலான், இந்த ஆண்டவருடைய கட்டளைக்கு விசுவாசமாக இருந்தவர் ஓசானம். ஒவ்வொருவர் மேலும் உள்ள இறை அன்பையும் பிரெட்ரிக் ஓசானம் விசுவசித்தவர். மற்றவர்களைவிட அதிகம் அன்பு தேவைபட்டவர்கட்கு அன்பைக் கொடுக்கும் தேவையை உணர்ந்தார். இதிலேதான் தன் அழைப்பைக் கண்டுகொண்டார். இந்தப் பாதையில் கிறிஸ்து இவரை அழைத்தார். இதை தனது புனிதத்துவத்துக்கான வழியாக பிரெட்ரிக் கண்டுகொண்டார்

உலகெங்குமிருந்து வந்து தமது ஸ்தாபகரின் ஆசாரத்துச் சூரியவராக்கும் திருச்சடங்கில் பங்குகொண்ட வின்சன்டீபோல் சபை உறுப்பினர் அனைவரையும் இருதந்தை அன்போடு வாழ்த்தினார். கடவுளையும் எமது சகோதரர்களையும் அன்பு செய்வோம் ஆனால் எமது கரங்களால் அன்பு செய்யவேண்டும் அது எமது நெற்றி வியர்வையாய் இருக்கட்டும். என்று புனித வின்சன்டீபோல் கூறினார். இதை செயல்வடிவமாக்க தனது 20வது வயதில் தனது நண்பர்களுடன் புனித வின்சன்டீபோல் சபையை தொடங்கினார் ஓசானம்,

பணியிலும் பகிர்விலும் ஏழைகளை அன்பு செய்வதை தனது நோக்கமாகக் கொண்ட புனித வின்சன்டீபோல் சபை பாரீஸில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது உலகமுழுதும் பரவியுள்ளது. தனது மாணவகாலத்தில் புனித வின்சன்டீபோல் சபையில் பணியாற்றியதை பாப்பரசர் நினைவு கூர்ந்தார்.

Print : "Annai printers", Jaffna.
Published by PAX CHRISTI.
St. JPSEPHS ASHRAM,
102, Main Street, Jaffna